DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | OS 21 of 2021 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | முருகேசன் |
| Father Name | : | பழனிச்சாமி |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 23.06.2025.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் அரவிந்தனுக்கு அண்ணன் முறை. நான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க அழைப்பானை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதியின் தரப்பில் தயார் செய்து கொடுக்கப்பட்ட பிரமாண பத்திரிக்கையில் தான் நான் படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு தேதி அதிலுள்ள நபர்கள் என்னென்னவாக உள்ளார்கள் முதலிய விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் பழைய சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் புதிய சர்வே நம்பர் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் நான்கு எல்லைகள் தெரியாது என்றால் எனக்கு தெரியாது. நாச்சிமுத்து கவுண்டர் கடந்த 01.12.1980 தேதியில் கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், பிறர் சொல்லி தான் தெரியும்.

2. பூர்வீக சொத்துக்களை நாச்சிமுத்து கவுண்டர் வகையறா விற்று விட்டார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே விற்கப்பட்ட பூர்வீகம் சொத்துக்கள் சம்பந்தமாக உரிமை கோரி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை.

**( பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2025.06.23 18:10:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.